**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.4/2025 இன்**

**அசல் வழக்கு எண்.175/2020**

**வேலம்மாள் என்ற வேணி** .... மனுதாரர்/வாதி

// எதிர் //

1) **கோதையம்மாள்**

2) **முருகம்மாள் என்ற லெட்சுமி**

3) **ராமசுப்பிரமணியன்** .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 12.02.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. இராவணசிவன் அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. வெங்கடகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள், அசல் வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் / வாதி தரப்பில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியத்தினை மறுதிறவு செய்ய வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.02.19 18:21:09 +0530

**2) <u>மனு சுருக்கம் :-</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கானது, மனுதாரர்/வாதி தரப்பு விவாத உரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், அதுவகைக்கு தயார் செய்த போதுதான் முந்தைய வழக்கு குறித்து ஆவணங்களின் நகல்களையும், மனுதாரர்/வாதி தகப்பனார் உடல்நலம் குன்றியவர் என்பதற்குரிய சான்றிதழினையும் தாக்கல் செய்யாமை தெரிய வந்தது என்றும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு வலுவூட்டக்கூடியது என்றும், எனவே மேற்படி ஆவணங்களை தனது வழி குறியீடு செய்ய முடிக்கப்பட்ட மனுதாரர்/வாதி வழக்கினை மீண்டும் திறக்கவும், மனுதாரர்/வாதியை மீண்டும் சாட்சியம் கூற வரவழைக்கவும் வேண்டியுள்ளது என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுவதாய் உள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுசட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அது பிரதமத்திலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றும், வழக்கில் 1வது சாட்சி 16.07.2022 ல் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், மூன்று வருடங்கள் கழித்து எவ்விதமான நியாயமான காரணங்களின்றி காலதாமதமாக என்ன காரணத்தினால் ஆவணங்கள் முன்பே தாக்கல் செய்யப்பட்டு குறியிடப்படவில்லை என்ற விபரத்தை அபிடவிட்டில் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிந்த பின்பு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.02.19 18:21:14 +0530

Lacuna Fillup செய்யும் பொருட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த காரணத்திற்காக வழக்கை ரீ-ஓப்பன் செய்ய வேண்டும் என்று கேட்டிருப்பது ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவினை எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை</u>** :-

மனுதாரர் / வாதி தரப்பில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியத்தினை மறுதிறவு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது, மனுதாரர்/வாதி தரப்பு விவாத உரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், அதுவகைக்கு தயார் செய்த போதுதான் முந்தைய வழக்கு குறித்து ஆவணங்களின் நகல்களையும், மனுதாரர்/வாதி தகப்பனார் உடல்நலம் குன்றியவர் என்பதற்குரிய சான்றிதழினையும் தாக்கல் செய்யாமை தெரிய வந்தது என்றும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு வலுவூட்டக்கூடியது என்றும், எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6) எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கில் 1வது சாட்சி 16.07.2022ல் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், மூன்று வருடங்கள் கழித்து எவ்விதமான நியாயமான காரணங்களின்றி காலதாமதமாக என்ன காரணத்தினால் ஆவணங்கள்



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.02.19 18:21:20 +0530

முன்பே தாக்கல் செய்யப்பட்டு குறியிடப்படவில்லை என்ற விபரத்தை அபிடவிட்டில் தெரிவிக்கவில்லை என்றும், வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிந்த பின்பு Lacuna Fillup செய்யும் பொருட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7) அசல் வழக்கானது, மனுதாரர்/வாதியால் விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, விவாத உரைக்காக போடப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் விவாத உரைக்காக தயார் செய்த போதுதான் முந்தைய வழக்கு குறித்து ஆவணங்களின் நகல்களையும், மனுதாரர்/வாதி தகப்பனார் உடல்நலம் குன்றியவர் என்பதற்குரிய சான்றிதழினையும் தாக்கல் செய்யாமை தெரிய வந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்கண்ட ஆவணங்களை தங்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய வேண்டியது தங்கள் தரப்பை வலுவூட்டுவதாக அமையும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணத்தினை கருத்திற்கொண்டும், மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலும், மேற்கண்ட ஏனைய காரணங்களாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருகிறது. எனினும், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரையத்தை ஈடு செய்யும் வகையில் இந்த மனுவை செலவுத்

Digitally signed by RAMADHAS
RAMADHAS Date: 2026.02.19 18:21:26 +0530

தொகையுடன் அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8)** முடிவாக, மனுதாரர், எதிருரை தாக்கல் செய்த 3ம் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1,000/-ஐ 26.02.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் மனு தானாக தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.02.19 18:21:31 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.02.19 18:21:36 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம், நாங்குநேரி

இ.ம.எண்.4/2025 இன்

அ.வ.எண்.175/2020

நேரிய/வரைவு உத்தரவு

நாள். 19.02.2026